டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 19.02.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 199 - Madurai | Online Edition

# பழங்குடியின இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சி ஆளுநர் தொடங்கி வைக்கிறார்

சென்னை, பிப்.18

தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டம், ஏனாத்தூரில் உள்ள ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 17-வது பழங்குடியின இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சி இன்று (19.02.26) தொடங்கி 25-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் மை பாரத் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வை தமிழ்நாடு ஆளுநர் ஆர் என் ரவி, பிப்ரவரி 20-ம் தேதியன்று முறைப்படி தொடங்கி வைக்கிறார்.

இது குறித்து சென்னையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் மை பாரத் அமைப்பின் மாநில இயக்குநர் செந்தில்குமார் பேசும்பொழுது, இந்த 17-வது பழங்குடியினர் இளைஞர் பரிமாற்றத் நிகழ்ச்சியில் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த 50 பேர், ஜார்க்கண்டைச் சேர்ந்த 20 பேர், ஒடிசாவைச் சேர்ந்த 70 பேர், மகாராஷ்டிராவைச் சேர்ந்த 60 பேர் என மொத்தம் 200 பழங்குடியின இளைஞர்கள் பங்கேற்கின்றனர் என்றார்.

மேலும் தொழில் வழிகாட்டல், வாழ்க்கைத் திறன் கல்வி, நேர்மறை சிந்தனை, ஆளுமை மேம்பாடு, மற்றும் இளைஞர்களுக்கு தலைமைப் பண்பு குறித்த அமர்வுகள் இதில் இடம் பெறுகின்றன என்றார். இளையோர் நாடாளுமன்ற அமர்வுகள் மூலம் ஜனநாயக நடைமுறைகள், பொதுக் கொள்கைகள், நாடாளுமன்ற செயல்முறைகள் குறித்தும் அவர்களுக்கு விளக்கப்படும் என்றார். ஸ்டாண்ட் அப் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா உள்ளிட்ட பழங்குடியினர் நலன் சார்ந்த மத்திய அரசின்

திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு அமர்வுகள் நடைபெற உள்ளன என்றும் இதன் மூலம் தொழில் முனைவோர் மற்றும் சுயதொழில் வாய்ப்புகள் குறித்து இளைஞர்களுக்கு கற்பிக்கப்படுகிறது என்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையின் பயிற்சிகள் மூலம் பேரிடர் தயார் நிலை, அவசரகால செயல்பாடுகள் குறித்தும் இளைஞர்களுக்கும் எடுத்துரைக்கப் படும் என்றார்.

நாள்தோறும் மாலை வேளையில் இந்நிகழ்வில் பங்கேற்றுள்ள மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் பழங் குடியினர் நடனங்கள், தமிழர் பாரம்பரியக் கலைகள், தமிழ்நாடு பழங்குடியினர் நடனங்கள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மாமல்லபுரத்தில் உள்ள ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம், செயிண்ட் கோபைன் தொழிற் சாலை, பட்டு நெசவுத் தளங்கள் மற்றும் காஞ்சிபுரம் அருகே முக்கியப் பண்பாட்டு, பாரம்பரிய மையங்களுக்கும் இளை-ஞர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர் என்று தெரிவித்தார். நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் ஸ்ரீ சங்கரா கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் கே.ஆர்.வெங்கடேசன் மற்றும் சென்னை பத்திரிகை தகவல் அலுவலகத்தின் துணை இயக்குநர் ஜெ.விஜயலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# மண் பொட்டாசியம் உயர்த்த ‘வாழைத் தீர்வு’ – மாணவர்கள் பரிந்துரை



நாமக்கல், பிப்.18

நாமக்கல் மாவட்டம், ஏரைய மங்கலம் பகுதியில் மண் பரிசோதனையில் பொட்டாசியம் குறைவாக இருப்பது கண்டறியப் பட்டதைத் தொடர்ந்து, பி.ஜி.பி. வேளாண்மை கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு ‘வாழைத் தீர்வு’ குறித்து பரிந்துரை செய்தனர். மண்ணில் பொட்டாசியம் அளவை உயர்த்து வதற்காக வாழைப்பழக் கழிவுகள் மற்றும் வாழைத் தண்டை பயன்படுத்தி தயாரிக்கும் கரைசலைப் பயன்படுத்தலாம் என தெரிவித்தனர்.

மாணவர்கள் அளித்த செயல்விளக்கத்தில், நன்றாக பழுத்த வாழைப்பழம் மற்றும் வாழைத் தண்டு துண்டுகளை தண்ணீரில் ஊறவைத்து நொதிக்கச் செய்து தயாரிக்கும் கரைசலை வடிகட்டி மண்ணில் பயன்படுத்தும் முறையை விளக்கினர். இந்த இயற்கை முறையால் மண்ணில் உள்ள பொட்டாசியம் சத்து அதிகரித்து, பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூல் மேம்படும் என கூறப்பட்டது.

மேலும், ரசாயன உரங்களின் மீது சார்பு குறைந்து, குறைந்த செலவில் சத்து மேலாண்மை செய்ய முடியும் என்பதும் வலியுறுத்தப்பட்டது. இந்த பரிந்துரை விவசாயிகளிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது.






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# இன்று (பிப்ரவரி 19) மண் ஆரோக்கிய அட்டை தினம்

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 19ஆம் தேதி நாடு முழுவதும் மண் ஆரோக்கிய அட்டை தினம் கொண்டாடப்படுகிறது. 2015ஆம் ஆண்டு இதே நாளில் மண் ஆரோக்கிய அட்டை திட்டம் தொடங்கப் பட்டதை நினைவுகூரும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது. இந்திய வேளாண்மையின் நிலைத்தன்மை மற்றும் உணவு பாதுகாப்பை உறுதி செய்யும் முக்கிய முயற்சியாக இந்த திட்டம் திகழ்கிறது.

இந்தியாவில் சுமார் 55-60% மக்கள் நேரடியாகவும் மறைமுக மாகவும் வேளாண்மையை சார்ந்துள்ளனர். எனவே மண் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுவது நாட்டின் பொருளாதாரத்துக்கும் உணவு பாதுகாப்புக்கும் அத்தியாவசியமானது.

**மண் ஆரோக்கிய அட்டை திட்டத்தின் தோற்றம்**

2015 பிப்ரவரி 19ஆம் தேதி, ராஜஸ்தான் மாநிலம் சுரத்கரில், இந்திய அரசின் பிரதமர் நரேந்திர மோடியால் மண் ஆரோக்கிய அட்டை திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தை வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் செயல்படுத்துகிறது. முன்னதாக பல பகுதிகளில் உரங்கள் மண் பரிசோதனை அடிப்படையின்றி பொதுவான பரிந்துரைகளின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்டன. இதனால் குறிப்பாக நைட்ரஜன் அதிகப்படியாகவும், பிற ஊட்டச் சத்துக்கள் குறைவாகவும் பயன்படுத்தப்பட்டன. இதுவே மண்வளம் குறைதல், விளைச்சல் தடை, உற்பத்திச் செலவு உயர்வு போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தியது.

**திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்**

- மண்ணின் ஊட்டச்சத்து நிலையை பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்தல்
- பயிர் சார்ந்த உரபரிந்துரைகளை வழங்குதல்
- சமநிலையான உரப் பயன்பாட்டை ஊக்குவித்தல்
- மண்வளத்தை நீடித்த முறையில் பாதுகாத்தல்
- உற்பத்திச் செலவைக் குறைத்து விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல்

**இந்திய மண்ணின் தற்போதைய நிலை**

இந்தியாவில் சுமார் 140 மில்லியன் ஹெக்டேர் பயிரிடப்படும் நிலப்பரப்பு உள்ளது. ஆனால் பல சவால்கள் நிலவுகின்றன :

- நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 30% நிலங்கள் சேதமடைந்துள்ளன.
- சுமார் 120 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் மண் சரிவு பிரச்சினையை எதிர்கொள்கின்றன.
- 6 மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் உப்புத் தன்மை மற்றும் காரத்தன்மை பாதிப்பில் உள்ளன.
- பல பகுதிகளில் மண்ணின் உயிர்க் கரிமப் பொருள் (Organic Carbon) 0.5% க்கும் குறைவாக உள்ளது.

மேலும், பரிந்துரைக்கப்பட்ட 4:2:1 என்ற NPK விகிதத்தைவிட சில மாநிலங்களில் 8:3:1 போன்ற சம நிலையற்ற பயன்பாடு காணப் படுகிறது.

**மண் ஆரோக்கிய அட்டையின் பயன்**

மண் ஆரோக்கிய அட்டையில் பின்வரும் விவரங்கள் வழங்கப்படு கின்றன :

- மண் pH மற்றும் மின் கடத்துத்தன்மை
- உயிர்க்கரிமப் பொருள் அளவு
- முக்கிய ஊட்டச்சத்துக்கள் (நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டா சியம்)
- துணை ஊட்டச்சத்துக்கள் (கந்தகம்)
- நுண்ணூட்டச் சத்துக்கள் (துத்தநாகம், இரும்பு, மாங்கனீஸ், செம்பு, போரான்)

இதுவரை 23 கோடிக்கும் மேற்பட்ட மண் ஆரோக்கிய அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 7,000க் கும் மேற்பட்ட மண் பரிசோதனை ஆய்வகங்கள் செயல்படுகின்றன.

**அறிவியல் மற்றும் பொருளாதார நன்மைகள்**

- **சம நிலையான உரப்பயன்பாடு**

மண் பரிசோதனை அடிப்படையிலான உரப்பயன்பாடு 15-25% வரை ஊட்டச்சத்து செயல்திறனை உயர்த்துகிறது.

- **அதிக விளைச்சல்**

பரிந்துரைக்கப்பட்ட உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் 5–20% வரை விளைச்சல் அதிகரிப்பு காணப்பட்டுள்ளது.

- **செலவுக் குறைப்பு**

அதிகப்படியான உரப்பயன்பாட்டைத் தவிர்ப்பதால் 8–10% வரை உற்பத்திச் செலவு குறைகிறது.

- **சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

இந்தியா ஆண்டு தோறும் 60 மில்லியன் டன் உரங்களை பயன்படுத்துகிறது. சம நிலையான பயன்பாடு நிலத்தடி நீர் மாசு பாட்டை குறைக்கிறது.

**காலநிலை மாற்றத்துக்கு எதிரான பாதுகாப்பு**

**உயிர்க்கரிமம் அதிகமான மண் :**

- வறட்சிக் காலத்தில் நீரை தக்க வைக்க உதவுகிறது
- கன மழை காலத்தில் நீர் ஊடுருவலை மேம்படுத்துகிறது
- கார்பன் சேமிப்பை அதிகரித்து காலநிலை மாற்றத்தை குறைக்க உதவுகிறது

மண்ணில் 0.1% உயிர்க்கரிமம் கூடுதல் கூட அதன் நீர்த் தாங்கும் திறனை மேம்படுத்துகிறது.

**எதிர்காலப் பாதை**


மண் ஆரோக்கிய அட்டை திட்டம் வெற்றியடைய :

- காலமுறைப்படி மண் பரிசோதனை அவசியம்
- கிராம மட்டத்தில் விழிப்புணர்வு அதிகரிக்க வேண்டும்
- ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை நடைமுறைப்படுத்த வேண்டும்
- இயற்கை உரங்கள் மற்றும் பசளை பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும்

முடிவுரை : மண் ஆரோக்கிய அட்டை தினம் ஒரு நினைவு நாளாக மட்டுமல்ல; நிலையான வேளாண்மைக்கான உறுதி மொழியாகும். மண்ணை பாதுகாப்பது விவசாயத்தை பாதுகாப்பதற்கு சமம்.

இன்று மண்ணை காப்போம்! நாளை உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வோம்!!.

தகவல் : **சிவரஞ்சனி சந்திரசேகர், மண் அறிவியல் ஆய்வாளர், வேளாண்மை கல்வி நிறுவனம், குமுளூர், திருச்சி.**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# கந்தர்வக்கோட்டையில் நெல் சாகுபடியில் மீத்தேன் குறைப்பு சிறப்பு பயிற்சி



புதுக்கோட்டை, பிப்.18

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், புதுப்பட்டி கிராமத்தில், தமிழ் நாட்டில் நெல் சாகுபடி முறைகளில் மீத்தேன் குறைப்பு குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI), வாஷிங்டன், D.C., அமெரிக்கா ஆகியவை இணைந்து இந்த பயிற்சியை ஏற்பாடு செய்திருந்தன. இப்பயிற்சியில் சுற்றுவட்டார பகுதி களைச் சேர்ந்த பல்வேறு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சியை வா.பாலமுருகன் வரவேற்பு உரை வழங்கி, திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் மீத்தேன் உமிழ்வை குறைக்கும் அவசியத்தை விளக்கினார். வேளாண்மை அலுவலர் விக்னேஷ், மீத்தேன் குறைப்பு நடைமுறைகள், அரசு நலத்திட்டங்கள் மற்றும் விவசாயிகள் பெறக்கூடிய மானியங்கள் பற்றி எடுத் துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் சூடாமணி, மண் பரிசோதனை, சமநிலையான உர மேலாண்மை மற்றும் நிலத்தின் வளத்தை பாதுகாப்பது குறித்து பேசினார்.

பின்னர் நடைபெற்ற தொழில்நுட்ப அமர்வில் டாக்டர் இரா. ரஞ்சித், நேரடி நெல் விதைப்பு (DSR), மண் பரிசோதனை அடிப் படையிலான உர மேலாண்மை (STCR) முறைகள் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்து விளக்கினார். வா.பாலமுருகன், காய்ச்சலும் – பாய்ச்சலும் முறையில் (AWD) நீர் மேலாண்மை மற்றும் அதன் மூலம் மீத்தேன் வாயு குறைப்பு பற்றி கூறினார். முனைவர் ம.செந்தில் குமார், நெல்லில் பிங்க் பிக்மென்டட் ஃபாகல்டேட்டிவ் மெத்திலோட்ரோபிக் பாக்டீரியா (PPFM) பயன் பாட்டின் மூலம் விளைச்சல் உயர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாது காப்பு குறித்து எடுத்துரைத்தார். ச.பா.பாக்கியலட்சுமி, அன்றாட

வாழ்வில் கார்பன் குறைக்கும் எளிய நடைமுறைகள் குறித்து விளக்கினார்.

மாதிரி விவசாயி காசிலிங்கம், தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டு, புதிய முறைகளைப் பின்பற்றுவதால் கிடைத்த நன்மைகளை எடுத்துரைத்தார். பயிற்சியில் விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு அவர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டது. இறுதியில் வா.பாலமுருகன் நன்றியுரை வழங்கினார்.

## இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.18

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டாரத்தைச் சேர்ந்த குள்ளபுரம் கிராமத்தில் உயர்தரமும் சத்தான உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்வதுடன், இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற செயற்கை உள்ளீடுகளை தவிர்க்கும் நோக்கில் இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த பயிற்சியை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை மாணவி நிகிதா, கிராம வேளாண் பணிப்பயிற்சி (யூபுநிசி) திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தினார். இதில் 6 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பயிற்சியின் போது, இயற்கை உரங்கள் தயாரிக்கும் முறை, உயிரியல் பூச்சி கட்டுப்பாடு, பசுமை உரம் பயன்பாடு, மண் வளத்தை பாதுகாக்கும் நடைமுறைகள் மற்றும் நிலையான வேளாண்மை முறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. மேலும், இயற்கை முறைகளை பின்பற்றுவதன் மூலம் மண் ஆரோக்கியம் மேம்பட்டு, நீண்டகாலத்தில் அதிக வருமானம் பெறலாம் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

# வட்டார அளவில் விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம்



திருச்சி, பிப்18

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாரம், மும்முடி சோழமங்கலம் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் அட்மா திட்ட உறுப்பினர்களுக்கு கூட்டம் நடைபெற்றது.

இதில் வேளாண்மை அலுவலர் கௌசல்யா பேசுகையில் வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், நில உடமை பதிவு, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், பாரதப் பிரதமரின் கௌரவ நிதி திட்டம், பசுந்தாள் விதைப்பு, குறுவை நெல் சாகுபடி செய்தல், மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், பயிர் காப்பீடு திட்டம் பற்றி விரிவாக விளக்கி கூறினார். தோட்டக்கலை உதவி இயக்குநர் தே.தனசேகர், பேசுகையில் பழ செடி தொகுப்பு வழங்குதல், தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு நுண்ணூட்ட உரம் பயன்படுத்துதல் உர மேலாண்மை செய்தல் பற்றி விரிவாக விளக்கி கூறினார்.

மாநில தோட்டக்கலை மேம்பாடு திட்டத்தின் கீழ் மாடித்தோட்டம் பைகள், விதைகள் வழங்குதல் நுண்ணீர் பாசனம் திட்டம் பற்றி அட்மா திட்ட உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கி கூறினார்கள். எடிசன், வேளாண்மை உதவி அலுவலர் மானிய திட்டங்கள் பதிவு தேவைபடும் ஆவணங்கள் பற்றி விளக்கி கூறினார்.

சம்பா நெல் சாகுபடி அடுத்து எள், உளுந்து மானிய விலையில் விதை, நுண்ணூட்ட உரங்கள், திரவ உயிர் உரங்கள் பெற்று பயன்பெற கேட்டு கொண்டார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரி செல்வன் ஆலோசனை குழு கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அட்மா திட்ட

2025-2026 ஆண்டில் பெறப்பட்ட தவணை இலக்கு விவரம் பற்றி விவசாயிகள் அட்மா திட்ட ஆலோசனை குழு உறுப்பினர் களுக்கு விளக்கி கூறி செயல் விளக்கம் முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து பயன்பெற கேட்டு கொண்டார்.

ஆலோசனை குழு கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் அனைவருக்கும் தொழில்நுட்ப கையேடு மற்றும் தொழில்நுட்ப துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாட்டினை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் செய்து இருந்தார்.



# தமிழக பொருளாதாரத்தில் வேளாண் பங்களிப்பு குறைவு ஏன்?



தமிழகத்தில் பிரதான முக்கிய தொழிலாக இருந்த வேளாண் துறையில் தற்போது உள்ள மக்கள் தொகையில் 25% மக்களே விவசாயிகளாக உள்ளனர். மீதமுள்ள 75% வேளாண் அல்லாத துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இருந்த போதிலும் உணவு தானிய உற்பத்தி என்பது அரசு கொள்முதல் செய்ய முடியாத அளவுக்கு அதிகரித்து உள்ளதாக மாநில திட்டக்குழு அறிக்கையில் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் தமிழக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் தெரிவித்துள்ளன.

**விலைவாசி பற்றிய தகவல்**

தமிழகத்தில் ரேசன் கடையில் உணவு பொருட்கள் வழங்கப் படுவதால் விலைவாசி கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. முதியோர் களின் எண்ணிக்கை அதிகமாகவும் இளஞர்களின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது.

**தமிழகத்தில் வேளாண் வளர்ச்சி நிலை எப்படி?**

தமிழகத்தில் வேளாண் துறையானது 1.9 லட்சம் கோடி பங்களிப்பை அளித்து வருகின்றன. 2024-25யில் கேழ்வரகு, கரும்பு விளைச்சலில் தமிழகம் முதலிடத்திலும், எண்ணெய வித்துகளில் 2ஆம் இடத்தையும் நிலக்கடலையில் 3ஆம் இடத்தை பெற்றுள்ளது. 24-25யில் விவசாயிகளுக்கு 2.99 கோடி கடனாக வழங்கபட்டுள்ளதாக தகவல். 2030யில் டிரில்லியன்டாலர்பொருளாதாரத்தை அடைய இலக்கு வழி வகுக்கபட்டுள்ளன.

**வளர்ந்த நாடுகளில் வேளாண் துறையின் பங்களிப்பு?**

வளர்ந்த நாடுகளில் பொருளாதாரத்தில் வேளாண் துறையின் பங்களிப்பு ஒற்றை இலக்கத்தில் இருக்கும்.

ஆனால் தமிழகத்தில் வேளாண் தொழிலைவிட மற்ற துறைகள் வேகமாக வளர்ச்சி கண்டு வருவதால் மக்கள் வேலை வாய்ப்பாக அங்கே சென்று விடுகின்றனர்.

விவசாயத்தை விட்டுவிட்டு. உலகம் முழுவதுமான வளர்ச்சியில் 3% யாகவும், இந்தியாவின் வளர்ச்சியில் 7% யாகவும் இருந்த நிலையில் தமிழகம் இரட்டை இலக்கத்தில் உற்பத்தியில் வளர்ச்சியடைந்துள்ளது.

**வேளாண் துறை முழு நேர தொழிலா?**

வேளாண்மை வருடம் முழுவதுமான 365 நாள் தொழில் அல்ல, முழுக்க முழுக்க பட்டம், மழை பொழிவு, தட்ப வெப்ப நிலை சார்ந்த பகுதி நேர தொழிலாக (பருவ தொழிலாக) தான் உள்ளது.

தமிழகத்தில் வேளாண் சாகுபடி குறையவில்லை. ஆனால் அதை நம்பாத விவசாயிகள் தான் படிப்படியாக வேறு தொழிலுக்கு (கட்டிட வேலை, மில் வேலை) சென்று விட்டதாக தரவுகள் உள்ளன. வேளாண்மையில் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தால் வெளியேறி விட்டதாக தகவல் கூறுகிறது.

வேளாண் தொழில் மிகவும் சவாலான தொழில். ஒரு புறம் வறட்சி, ஒரு புறம் மழை காரணமாக நிச்சயமற்ற மகசூல் இருப்பதால் இளைய தலைமுறையினர் ரிஸ்க் எடுக்க முடியாத நிலை. ஆனால் உற்பத்தியில் நல்ல விளைச்சல் உள்ளது.

இதற்கான காரணமாக இருப்பது இயந்திரங்களின் உதவியாலும் நவீன தொழில்நுட்பத்தாலும் தான்.

படித்த இளைஞர்கள் படிப்படியாக விவசாயத்தில் ஈடுபட வேண்டும். அவர்களின் பங்களிப்பு எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு தேவையாகும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# வீட்டிலிருந்தே விதைப் பரிசோதனைக்கு விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல், பிப்.18

திண்டுக்கல் மாவட்ட விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் விதை பரிசோதனை செய்ய ஆன்லைனில் விண்ணப்பிப்பது அவசியம் என திண்டுக்கல் விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் ப.பிரபாகரன் மற்றும் ம.ஜமுனாராணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது : 2025-26 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 1427 பணி விதை மாதிரிகளில் 232 விதை மாதிரிகளும், 2024-25 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 1640 பணி விதை மாதிரிகளில் 247 விதை மாதிரிகளும் தரம் குறைவானவை என விதை பகுப்பாய்வின் முடிவில் றியப்பட்டன. எனவே விதை விற்பனையாளர்கள் விற்கும் முன்பும், விவசாயிகள் விதைக்கும் முன்பும் விதை பரிசோதனை செய்வது அவசியம்.

விதை விற்பனையாளர்கள் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத்துறை இணையதளத்தில் தங்களுக்கு அளிக்கப்பட்ட பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய வற்றை பயன்படுத்தி உள்நுழையவும். பின்பு கடையின் விபரம், பயிர், ரகம், குவியல் எண் ஆகியவற்றை பதிவு செய்யவும். புறத் தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் பிற ரக கலப்பு போன்ற நான்கு காரணங்களுக்கு விதைப்பரிசோதனை செய்யலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட விதை மாதிரிகளை பதிவு செய்ய "Add details"யை சொடுக்கவும். இறுதியில் ‘Save‘ சொடுக்கவும். பின்பு இந்த விண்ணப்பத்தினை நகல் எடுத்து, விதை மாதிரிகள், விவசாயியின் முகவரி, விதை மாதிரிகளைப் பற்றிய விவரங் களுடன் மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- செலுத்தி விதைப்பரிசோதனை நிலையத்தில் ஒப்படைக்கவும். பயிரின் வகைகளுக்கு ஏற்ப 30 நாட்களுக்குள் பரிசோதனை முடிவு அளிக்கப்படும். இவ்வாறு விதை பரிசோதனை அலுவலர் கூறினார்.

முகவரி : மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், உழவர் மையம் வளாகம், குடகனாறு இல்லம் பின்புறம், திண்டுக்கல் - 624 003.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் — நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் — ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் — தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் — அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக — ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING — விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் — ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மண்புழு உரத்தின் முக்கியத்துவம்

### மண்புழு உரம் தயாரிக்கும் முறை

● மக்கக்கூடிய கழிவுகளை சேகரிக்க வேண்டும். வீட்டில் கிடைக்கும் காய்கறிக் கழிவுகளையே இதற்கு பயன்படுத்தலாம்.

● மக்கக்கூடிய கழிவுகளை மூட்டம் போட்டு, அதில் சாணக் கரைசலை தெளித்து, 20 நாட்களுக்கு மக்கவிட வேண்டும். இவ்வாறு 20 நாட்கள் மக்கிய கழிவுகள் மண்புழு சாப்பிடுவதற்கு ஏதுவாக இருக்கும். நன்றாக உலர்ந்த கால்நடை கழிவு களையும், சாண எரிவாயுக் கழிவுகளையும் மட்டுமே மண்புழு உரம் தயாரிக்க நேரடியாக உபயோகிக்க வேண்டும்.

### மண்புழு உர உற்பத்திக்கான படுக்கை

மண்புழு உரப்படுக்கை தயாரிக்க வேண்டும். இதற்கு தென்னை நார்கழிவு அல்லது கரும்புத் தோகைகளை மண்புழு உர உற்பத்திற்கான கட்டமைப்பின் அடிப்பாகத்தில் 3 செ.மீ உயரத்திற்கு பரப்ப வேண்டும். ஆற்று மணலை இந்தப் படுக்கையின் மேல் 3 செ.மீ உயரத்திற்கு தூவ வேண்டும். பிறகு 3 செ.மீ உயரத்திற்கு தோட்ட மண் பரப்ப வேண்டும். இதற்கு மேல் தண்ணீரைத் தெளிக்க வேண்டும். இவ்வாறு தயார் செய்யப்பட்டது மண்புழு உரப்படுக்கை ஆகும்.

### கழிவுகளை படுக்கையில் போடும் முறை

பாதி மக்கிய கழிவுகளை 30 சதவீதம் கால்நடை கழிவுடன் எடை அல்லது கன அளவின் அடிப்படையில் கலக்க வேண்டும். இக்கலவையை மண்புழு உர கட்டமைப்பின் விளிம்பு வரை நிரப்ப வேண்டும். ஈரப்பதம் 60 சதவீதம் இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மண்புழுக்களை சமமாக பரப்ப வேண்டும். ஒரு மீட்டர் நீளம், ஒரு மீட்டர் அகலம், 0.5 மீட்டர் உயரத்திற்கு இரண்டு கிலோ மண்புழுக்கள் (2000 மண்புழு) தேவைப்படும். மண்புழுவினை கழிவுகளுக்குள்ளே விட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதனை மேலே பரப்பினால் போதுமானது.

### தண்ணீர் தெளித்தல்

தினமும் தண்ணீர் கட்டாயம் தெளிக்க வேண்டும். 60 சதவீதம் ஈரப்பதம் இருக்குமாறு பராமரிக்க வேண்டும். தேவையான போது தண்ணீரினைத் தெளிக்க வேண்டும், அப்படியே ஊற்றக்

கூடாது. அறுவடைக்கு முன்னதாக தண்ணீர் தெளிப்பதை நிறுத்தி விட வேண்டும்.

**மண்புழு உரம் அறுவடை**

மண்புழு உர படுக்கையின் மேல் உள்ள மண்புழு கழிவினை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். இந்த அறுவடையை வாரத்திற்கு ஒரு முறை செய்ய வேண்டும். கையால் மண்புழு கழிவினை சேகரித்து நிழலில் குவித்து வைக்க வேண்டும். இந்த அறுவடையினை மண்புழு தெரியும் இடம் வரை செய்ய வேண்டும். இந்த அறுவடையினை தகுந்த இடைவெளியில் செய்வதன் மூலம் நல்ல தரமான மண்புழு உரத்தினை பெற முடியும்.

சிறிய படுக்கை முறையில், தகுந்த இடைவெளியில் மண்புழு உர அறுவடை தேவையில்லை. இந்த முறையில் கழிவுகளின் குவிப்பு 1 மீட்டர் வரை இருப்பதனால், இந்த கழிவுகள் முழுவதும் மக்கிய பிறகு அறுவடை செய்தால் போதுமானது.

**மண்புழு அறுவடை**

மண்புழு உரம் தயாரிப்பு முடிந்தவுடன், மண்புழுக்கள் கருவுருதல் முறையில் உரத்திலிருந்து பிரித்தெடுக்கப்படு கின்றன. இம்முறையில் சிறிய மாட்டு சாணப்பந்துகள் உரக் குழியில் பல இடங்களில் வைக்க வேண்டும். இதனால் மண் புழுக்கள் அந்த சாணத்தினால் கவரப்படுகின்றன. பிறகு இதனை தண்ணீரில் போடுவதன் மூலம் சாணம் கரைந்து மண் புழுக்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. இந்தப் புழுக்கள், அடுத்த மண்புழு உரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

**மண்புழு உரம் சேமிப்பு**

இதனை நேரடியாகவே வயல்களில் பயன்படுத்தலாம். சேமிக்க நினைத்தால் அறுவடை செய்யப்பட்ட மண்புழு உரத்தை இருட்டான அறையில் 40 சதவிகிதம் ஈரப்பதத்தில் சூரிய ஒளி படாதவாறு வைக்க வேண்டும். இவ்வாறு வைப்பதால் ஈரப்பதம் வீணாவதைத் தடுக்கலாம். மக்கிய உரத்தை பாக்கெட் செய்வதை விட திறந்த வெளியில் சேமிப்பது சிறந்ததாகும். திறந்த வெளியில் மக்கிய உரத்தை சேமிக்கும் பொழுது தண்ணீர் தெளித்து ஈரப்பதத்தை காக்க வேண்டும். இதனால் நுண்ணுயிர்கள் அழிவதை தடுக்கலாம். 40 சதவிகிதம் ஈரப் பதத்துடன் வைப்பதினால் மண்புழு உரத்தின் தரம் குறையாமல்

பாதுகாக்கலாம். விற்கும் சமயத்தில் மட்டுமே பைகளில் நிரப்ப வேண்டும்.

**நன்மைகள்**

● மற்ற மக்கும் உரங்களை விட மண்புழு உரத்தில் அதிக சத்துக்கள் உள்ளன.

● மண்புழு உரத்தில் நன்மை தரும் நுண்ணுயிர்களான அசட்டோபேக்டர், அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாக்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன.

● இந்த நன்மை தரும் நுண்ணுயிர்கள் காற்றில் இருக்கும் தழைச்சத்தை மண்புழு உரத்தில் நிலைநிறுத்துகிறது பயிர் களுக்கு வேண்டிய வளர்ச்சி ஊக்கிகளை சுரந்து மண்புழு உரத்தில் நிலை பெறச் செய்கிறது.

● கரையாமல் இருக்கும் மணிச்சத்தை கரைத்து கொடுக்கிறது.

● திடக்கழிவுகளில் ஏதேனும் நச்சுத் தன்மை கொண்ட பொருட்கள் இருந்தால் அவை மண்புழு வயிற்றுக்குள் செல்லும் பொழுது அவைகளின் குணங்கள் மாற்றப்படுகின்றன.

இவ்வாறு மண்புழு உரத்தின் முக்கியத்துவத்தினை வேலூர் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ச.சண்முகப்பிரியா, தெரிவித்துள்ளார்.

## மா மரத்தில் மாவு பூச்சி கட்டுப்படுத்தும் முறை பயிற்சியளித்த கல்லூரி மாணவர்



மதுரை, பிப்.18

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர் Banti Kumar வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் குழுவில் பயிற்சி பெற்று வருகிறார். ஆவிச்சுபட்டி கிராமத்தில் மா மரத்தில் மாவுப்பூச்சி கட்டுப்படுத்த மா மரப்பட்டை கட்டுதல் (Banding) குறித்து விவ சாயிகளுக்கு பயிற்சி அளித்தார். செயல்படுத்தும் முறை மற்றும் அதன் பயன்கள் குறித்தும் எடுத்துரைத்தார். பின்னர் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இதில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# ஊராட்சி ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் வாழ்வாதார மேம்பாட்டு பயிற்சி

விருதுநகர், பிப்.18

சீட்ஸ் மற்றும் மிஷின் சம்ரிதி மூலம் காலநிலை ஆபத்து தகவல் அடிப்படையிலான திட்டமிடல் மூலம் அமைப்புசார் மாற்றத்துடன் பேரிடர் தடுப்புத் திறன் மேலாண்மை திட்டம் காரியாபட்டியில் உள்ள 25 ஊராட்சிகளில் கடந்த 2 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.





இதன் தொடர்ச்சியாக நேற்று அருப்புக் கோட்டை, வேளாண்மை அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து, ஆண்டு முழுவதும் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கும் நோக்கில், ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

இந்த பயிற்சியில், பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்பு, நாட்டுக்கோழி, மீன்வளம், தோட்டக்கலை உள்ளிட்ட பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் முறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. ஒரு பகுதியின் கழிவுகளை மற்றொரு பகுதியின் வளமாக மாற்றி பயன்படுத்தும் நடைமுறை (Integrated Farming System) மூலம் செலவை குறைத்து அதிக வருமானம் பெறலாம் என வல்லுநர்கள் தெரிவித்தனர்.

பால் மாடு மற்றும் ஆடு வளர்ப்பு, அசோலா தயாரிப்பு, கம்போஸ்ட் மற்றும் வெர்மி கம்போஸ்ட் உரம் தயாரித்தல், பண்ணைக் குளம் அமைத்து மீன் வளர்ப்பு போன்ற தலைப்பு களில் நடைமுறை விளக்கங்கள் வழங்கப்பட்டன.

மேலும், பால் மற்றும் காய்கறிகளுக்கு மதிப்பூட்டல் செய்து நேரடி சந்தை வாயிலாக விற்பனை செய்வது குறித்து ஆலோ சனைகள் வழங்கப்பட்டன. பயிற்சியில் காரியாபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட 25 ஊராட்சிகளை சேர்ந்த பகுதி ஒருங்கிணைப் பாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

ஒருங்கிணைந்த பண்ணைய முறையைப் பயன்படுத்தி குறைந்த நிலப்பரப்பிலும் அதிக வருமானம் ஈட்ட முடியும் என பயிற்சி வழங்குநர்கள் முனைவர்கள் நல்லகுரும்பன், ஷீபா, ஜடாகவிதா, சுதின், ஜீவா ஆகியோர் வலியுறுத்தினர்.

இதில் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் ராமசுப்பிர மணியன், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்வரன், பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் விஜய், அழகு சித்ரா, மீனாள் சுந்தரி, முத்துபிரியா உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# உயிரியல் ஊக்கிகள் (Biostimulants) - பயிர் வளர்ச்சியில் முக்கிய பங்கு - வேளாண்மை கல்லூரி மாணவர்கள் செயல்முறை விளக்கம்



நாமக்கல், பிப்.18

பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் அதிக மகசூல் பெறு வதற்காக உயிரியல் ஊக்கிகள் (Biostimulants) பயன்பாடு தற்போது அதிகரித்து வருகிறது. பாரம்பரிய உரங்களைப் போல ஊட்டச்சத்துகளை மட்டும் வழங்காமல், தாவரத்தின் உட்புற செயல்பாடுகளை தூண்டி வளர்ச்சியை மேம்படுத்துவது உயிரியல் ஊக்கிகளின் சிறப்பாகும்.

சித்தாளந்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பி.ஜி.பி வேளாண்மை கல்லூரி மாணவர்கள் உயிரியல் ஊக்கிகளின் பயன்பாடு குறித்து செயல்முறை விளக்கமாக எடுத்துரைத்தனர்.

**உயிரியல் ஊக்கிகளின் முக்கிய பங்குகள்**

- ஊட்டச்சத்து உட்கொள்ளும் திறனை அதிகரித்தல்
- வேர் வளர்ச்சியை ஊக்குவித்தல்
- வறட்சி, அதிக வெப்பம் போன்ற அழுத்த நிலைகளில் சகிப்புத்தன்மை வழங்குதல்
- மலர்ச்சி மற்றும் கனிவரத்தைக் கூட்டுதல்
- மண்ணின் நுண்ணுயிர் செயல்பாட்டை மேம்படுத்துதல்

மேலும், உயிரியல் ஊக்கிகளை தெளிப்பு மற்றும் மண்ணில் பயன்பாடு செய்வது குறித்து விவசாயிகளுக்கு நேரடி கள விளக்கம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி மூலம் குறைந்த செலவில், சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறைகள் குறித்து விவசாயிகள் விழிப்புணர்வு பெற்றனர்.

# தண்ணீர் தட்டுப்பாட்டை வெல்ல நவீன கரும்பு சாகுபடி

## கல்லூரி மாணவியின் விழிப்புணர்வு பயிற்சி

திண்டுக்கல், பிப்.18

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் நிலவும் தண்ணீர் பற்றாக் குறையைச் சமாளித்து, குறைந்த நீரில் அதிக லாபம் ஈட்டும் நோக்கில் சிலுக்கு வார்பட்டி கிராமத்தில் கரும்பு விவசாயிகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது.



மதுரை விவசாயக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவி அபிநயவர்ஷினி, தனது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் இப்பயிற்சியை ஒருங்கிணைத்தார். நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வரும் சூழலில், கரும்பு விவசாயத்தைக் கைவிடாமல் 'நீடித்த நவீன கரும்பு சாகுபடி' (SSI) மற்றும் சொட்டுநீர்ப் பாசனம் மூலம் எவ்வாறு வெற்றிகரமாகச் சாகுபடி செய்வது என்பது குறித்து அவர் விரிவாக விளக்கினார்.

**பயிற்சியின் முக்கியக் கருத்துக்கள்**

**நீர் சேமிப்பு :** சொட்டுநீர்ப் பாசனம் மூலம் 50% வரை தண்ணீர் சேமிப்பு வறட்சியிலும் பயிர் பாதுகாப்பு உறுதி.

**துல்லியப் பாசனம் :** வேர்ப்பகுதிக்கு நேரடியாக நீர் மற்றும் திரவ உரங்கள் (Fertigation) செல்வதால் வீணாவது தவிர்க்கப்படுகிறது.

**நாற்று நடவு :** ஒற்றைப் பரு நாற்றுகளை நடுவதால், ஆரம்பக் கட்ட சாகுபடிக்குத் தேவைப்படும் நீரின் அளவு குறைகிறது.

**இடைவெளி மேலாண்மை :** 5 அடி இடைவெளி விடுவதால் ஊடுபயிரிடுவது எளிதாகிறது.

'தண்ணீர் பற்றாக்குறையினால் கரும்பு விவசாயம் சவாலாக உள்ள நிலையில், SSI முறையில் குறைந்த நீரைக் கொண்டு இருமடங்கு மகசூல் பெற முடியும்,' என மாணவி அபிநய வர்ஷினி விவசாயிகளிடம் செயல்விளக்கம் அளித்தார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சமூக வரைபடம் தயாரிப்பில் வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.18

பி.ஜி.பி. வேளாண் கல்லூரி மாணவிகள், நாமக்கல் தொகுதியில் உள்ள ராசம் பாளையம் கிராமம் பகுதியில் சமூக சேவைப் பணியாக சமூக உறவு வரைபடம் தயாரித்தனர். இந்த வரைபடம் ஒரு சமூகத்தில் உள்ள மனிதர்கள், குழுக்கள் மற்றும் அமைப்புகளுக் கிடையேயான தொடர்புகளை தெளிவாக காட்டும் ஒரு பயனுள்ள முறையாகும்.

இந்த ஆய்வின் மூலம் கிராம மக்களுக்கு சமூகத்தில் யார் கருத்து முன்னோடிகள், யார் முக்கிய குழு உறுப்பினர்கள், எவ்வாறு துணைக் குழுக்கள் உருவாகியுள்ளன என்பதைக் கண்டறிய உதவியது. மேலும் கிராம வளர்ச்சி திட்டங்கள் செயல்படும் போது யாருடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதையும் இந்த வரைபடம் வெளிப்படுத்தியது.

மாணவிகள் கிராம பஞ்சாயத்து அலுவலகம், வட்டாட்சி அலுவலகம், அரசு தொடக்கப் பள்ளி மற்றும் பெரிய விவசாயிகள் முதல் சிறு விவசாயிகள் வரை பலரையும் சந்தித்து தகவல்கள் சேகரித்தனர். மக்களின் கருத்துகள், உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை பதிவு செய்து ஒழுங்காக வரைபடமாக வடிவமைத்தனர்.

இந்த முயற்சி மூலம் கிராம மக்களிடையே ஒற்றுமை வளர்ந்து, அரசு நலத்திட்டங்கள் சரியான பயனாளர்களை அடைய உதவும் என மாணவிகள் தெரிவித்தனர். கிராம முன்னேற்றத்திற்கு சமூக ஒருங்கிணைப்பு மிகவும் முக்கியம் என்பதையும் அவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த செயல்பாடு மாணவிகளின் சமூகப் பொறுப்புணர்வையும், கிராம வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பையும் வெளிப்படுத்தும் சிறந்த உதாரணமாகும்.

# நடமாடும் கால்நடை பயிற்சியில் கலந்து கொண்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.18

நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத்திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் நடமாடும் கால்நடை பயிற்சியில் கலந்து கொண்டோம். தமிழகத்தின் கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பு முக்கியமான வருமான மூலமாக உள்ளது. பசு, எருமை, ஆடு, செம்மறியாடு, கோழி போன்ற கால்நடைகள் மூலம் விவசாயிகள் தினசரி வருமானம் பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், கால்நடைகளுக்கு உடனடி மருத்துவ சேவை கிடைப்பது மிகவும் அவசியமாகிறது. இதற்காக மாநில அரசு மற்றும் Tamil Nadu Animal Husbandry Department இணைந்து மொபைல் வான் கால்நடை மருத்துவ சேவை திட்டத்தை செயல் படுத்தி வருகிறது. இந்த மொபைல் வான்கள் முழுமையான மருத்துவ உபகரணங்களுடன் கிராமங்களுக்கு நேரடியாக சென்று சேவை வழங்குகின்றன. மேலும், விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

இந்த சேவை மூலம் தூரப்பகுதிகளில் உள்ள விவசாயிகளும் மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய அவசியம் இன்றி, தங்கள் வீட்டுத் தோட்டத்திலேயே சேவை பெற முடிகிறது.

# கோமாரி மற்றும் மடி வீக்கம் போன்ற நோய்கள் குறித்து விளக்கமளித்த வேளாண் மாணவிகள்

சிவகங்கை, பிப்.18

சிவகங்கை மாவட்டம், கல்லல் வட்டத்தில் அமைந்துள்ள சிராவயல் கிராமத்தில், செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவிகள் ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சியின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு கால்நடைகளில் பொதுவாக ஏற்படும் கோமாரி மற்றும் மடி வீக்கம் போன்ற நோய்கள் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட்டன.



குறிப்பாக, நோய்களின் அறிகுறிகள், பரவும் விதம், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சரியான மேலாண்மை முறைகள் பற்றிய தகவல்கள் எடுத்துரைக்கப்பட்டன.

மேலும், கால்நடை ஆரோக்கியத்தை பாதுகாக்க தடுப்பூசி செலுத்துதல், சுத்தமான பராமரிப்பு நடைமுறைகள் மற்றும் கால்நடை மருத்துவ ஆலோசனையின் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.




# கால்நடை பராமரிப்பு குறித்த விவசாய விழிப்புணர்வு முகாம்

திண்டுக்கல், பிப்.18



திண்டுக்கல் மாவட்டம், நிலக் கோட்டை ஒன்றியம், செங்கோட்டை கிராமத்தில் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, விவசாயிகளுக்கு கால்நடைகளுக்கான தடுப்பூசி மற்றும் நோய் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமினை மதுரை வேளாண்மை கல்லூரி மாணவி அபிநயா சீ, ஒருங்கிணைத்து நடத்தினார். இதில் கிராமத்திலுள்ள ஏராளமான விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

பயிற்சியின் போது, பசுக்கள் மற்றும் ஆடுகளைத் தாக்கும் பல்வேறு நோய்கள் குறித்தும், அவற்றைத் தடுக்கும் முறைகள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டது. குறிப்பாக,

**தடுப்பூசி முக்கியத்துவம் :** கோமாரி நோய், அடைப்பான் நோய் மற்றும் ஆடுகளுக்கு ஏற்படும் பி.பி.ஆர் (PPR) நோய் ஆகிய வற்றைத் தடுக்க சரியான காலத்தில் தடுப்பூசி போடுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

**நோய் மேலாண்மை :** பருவநிலை மாற்றத்தின் போது கால்நடைகளைத் தாக்கும் நோய்களுக்கான அறிகுறிகள் மற்றும் அவற்றுக்கான முதலுதவி சிகிச்சைகள் குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

**பராமரிப்பு முறைகள் :** கொட்டகைகளைத் தூய்மையாக வைத் திருத்தல் மற்றும் சத்தான தீவன மேலாண்மை மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது எப்படி என்பது குறித்து மாணவி அபிநயா விளக்கினார்.

நிகழ்வின் இறுதியில், விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்க மளிக்கப்பட்டது. இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக செங்கோட்டை கிராம விவசாயிகள் தெரிவித்தனர்.

# பருத்தி காய்ப்புழு மேலாண்மை குறித்து வேளாண் மாணவி பயிற்சி



மதுரை, பிப்.18

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம், அம்மாபட்டி கிராமத்தில் கிராமப்புற பணி அனுபவத் திட்டத்தின் கீழ் பருத்தி காய்ப்புழு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல்முறை பயிற்சி நடைபெற்றது.

மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவி ரா.லோஹிதா இந்நிகழ்ச்சியை நடத்தி, பருத்தியில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் காய்ப்புழுவின் தாக்கம், அதன் வாழ்வுசுழற்சி மற்றும் ஆரம்ப நிலையிலேயே தாக்கத்தை கண்டறியும் வயல் ஆய்வு முறை களை விளக்கினார். ஒரு தாவரத்திற்கு 1-2 புழுக்கள் அல்லது சுமார் 5 சதவீத காய்கள் சேதமடைந்தால் உடனடி கட்டுப்பாட்டு நடவடிக்கை அவசியம் என்பதை கூறினார். மேலும் ஒருங் கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளில் காலத்திற்கு ஏற்ற விதைப்பு, வயல் சுத்தம், பாதிக்கப்பட்ட காய்களை சேகரித்து அழித்தல், ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சி பொறிகள் அமைத்தல், பறவைக் கூண்டுகள் பொருத்துதல், முட்டை அழிக்கும் உயிரியல் பகை பூச்சிகளை விடுதல் மற்றும் வேப்பச்சாறு 5 சதவீதம் தெளித்தல் போன்ற சுற்றுச்சூழல் நட்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். தவிர்க்க முடியாத சூழலில் மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை சரியான அளவில் மாற்றி மாற்றி பயன்படுத்த வேண்டும் என்றும், பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்களது சந்தேகங்களுக்கு தெளிவு பெற்று, அறிவியல் அடிப்படையி லான மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உற்பத்தி செலவை குறைத்து மகசூலும் தரமும் உயர்த்த முடியும் என்பதை உணர்ந்தனர்.

# பாரம்பரிய முறை களைக்கட்டுப்பாடு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்




நாமக்கல், பிப்.18 பி ஜி பி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் பாரம்பரிய முறையில் களைக் கட்டுப்பாடு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

உப்பு (1 kg), எலுமிச்சை பழச் சாறு (12), எள் எண்ணெய் (50 ml) மற்றும் 5 லிட்டர் தண்ணீர் ஆகியவற்றை கலந்து தயாரிக்கும் இந்த முறை பாரம்பரிய விவசாயிகளின் ITK (Indigenous Technical Knowledge) களை கட்டுப்பாட்டு நடைமுறையாகும்.

முதலில் தண்ணீரில் உப்பை நன்றாக கரைத்து, பின்னர் எலுமிச்சை சாறு மற்றும் எள் எண்ணெயை சேர்த்து கலக்க வேண்டும். இந்த கலவையை தெளிப்பான் மூலம் களைகளின் இலை மேற்பரப்பில் நேரடியாக தெளிக்கப்படுகிறது. உப்பு தாவர செல்களில் இருந்து நீரை இழக்கச் செய்து களை வாடச் செய்கிறது. எலுமிச்சை சாற்றில் உள்ள அமிலத் தன்மை இலை திசுக்களை சேதப்படுத்துகிறது, எள் எண்ணெய் கலவையை இலைகளில் ஒட்டச் செய்து செயல்திறனை அதிகரிக்கிறது. வெயிலான நாளில், குறிப்பாக களை இளம் நிலையில் இருக்கும் போது தெளித்தால் அதிக விளைவு கிடைக்கும்.

ஆனால் இது தேர்வு செய்யும் (selective) களை நாசினி அல்லாததால் பயிர் இலைகளில் படாமல் கவனமாக பயன் படுத்த வேண்டும். உப்பு தன்மை கொண்ட நிலத்தில் மட்டும் இந்த முறை ஏற்புடையதல்ல.